ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் ராஜாராம்

உதவி லட்சுமண குமார்

07-09-10 செவ்வாய் காலைச் செய்தி அறிக்கை மணி 0715

1. பிகார் மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

2. நக்சல் பிரச்சினைக்கு உடனடி தீர்வு கிடையாது என்று பிரதமர் கூறுகிறார்.

3. ஏழைகளுக்கு உணவுதானியங்களை வினியோகிப்பது தொடர்பாக உச்சநீதிமன்றத்துடன் மோதும் எண்ணம் கிடையாது என்று மத்திய அரசு கூறிவிட்டது.

4. கேரளாவில் மலப்புரம் கள்ளச்சாராய சம்பவத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்தது.

5. பாகிஸ்தானில் கிரிக்கெட் அணியில் கடந்த 5 ஆண்டுகளில் இடம்பெற்ற ஆட்டக்காரர்களின் சொத்துவிவரங்கள் விசாரிக்கப்படுகின்றன.

இனி விரிவான செய்திகள்

BIHAR ELECTION
பிஹார் மாநில சட்டப்பேரவை தேர்தல்கள், அடுத்த மாதம் 21 ஆம் தேதி முதல் நவம்பர் 20 ஆம் தேதி வரை 6 கட்டங்களாக நடைபெறும். முதல் மூன்று கட்டங்கள் அக்டோபர் மாதம் 21, 24 மற்றும் 28 ஆம் தேதிகளிலும், அடுத்த மூன்று கட்டங்கள், நவம்பர் மாதம் 1, 9 மற்றும் 20 ஆம் தேதிகளிளும் நடைபெறும். பதிவான வாக்குகள் நவம்பர் மாதம் 20 ஆம் தேதி எண்ணப்படும். 243 இடங்களுக்கான தேர்தல் அட்டவணையை அறிவித்த தலைமை தேர்தல் ஆணையர் திரு எஸ். ஒய். குரேஷி, பண்டிகைகள், சட்டம் ஒழுங்கு நிலைமை, மத்திய படைகள் போதுமான எண்ணிக்கையில் இருக்கின்றனவா என பல அம்சங்களை கருத்தில் கொண்டு, தேர்தல் தேதிகள் முடிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார். தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டதை அடுத்த, தேர்தல்கால நடத்தை நெறிகள், இன்று முதல் அமலுக்கு வருகின்றன. திரு திக்விஜய் சிங் காலமானதை அடுத்து, Banka மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல், நான்காவது கட்ட சட்டப்பேரவை தேர்தலின்போது, நவம்பர் மாதம் முதல் தேதி நடத்தப்படும். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதைப் பற்றி விரைவில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை தேர்தல் ஆணையம் கூட்டும் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

PM DOMESTIC
நக்சல் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு கிடையாது என்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் கூறிவிட்டார். நேற்று புதுதில்லியில் தமது இல்லத்தில் செய்தியாளர்களின் ஒரு

குழுவைச் சந்தித்து உரையாடிய அவர், நக்சல் பிரச்சினை முன்பை விட தொல்லை மிகுந்ததாக ஆகிவிட்டது; இதை சமூக- பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மற்றும் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது என்ற இருவழிகளில் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று கூறினார். உள்துறை அமைச்சர் திரு ப சிதம்பரம் மிகமிக நன்றாகச் செயல்படுவதாகவும், அவருக்கு தமது முழு ஆதரவும், நம்பிக்கையும் உண்டு என்றும் பிரதமர் தெரிவித்தார். நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடருக்கு முன்பாக மத்திய அமைச்சரவையில் மாற்றங்கள் வரலாம் என்றும் அவர் சூசகமாகத் தெரிவித்தார். தமது அமைச்சரவையில் இடம்பெறுவோரின் சராசரி வயது குறையவேண்டும் என விரும்புவதாகக் கூறினார். தமது அமைச்சரவை மிகவும் ஒன்றுபட்டு செயல்படுகிறது என்று கூறிய திரு மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் இடையே தொடர்பு இல்லை என்று கூறப்படுவதை நிராகரித்தார். மேலும் ஓய்வு பெறும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் டாக்டர் மன்மோகன் சிங் கூறிவிட்டார். ஜம்மு காஷ்மீர் பற்றிக் குறிப்பிட்ட அவர், காஷ்மீர் பள்ளத்தாக்கின் நிலைமை பற்றி மத்திய அமைச்சரவையின் பாதுகாப்புக் கமிட்டி இந்த வார இறுதியில் கூடி அலசி ஆராயும் என்றார். அங்கு நிலவும் தேக்க நிலையைப் போக்கிட மத்திய அரசு புதிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். காஷ்மீர் கலகத்தை ஒடுக்க சற்றே வேறுபட்ட அணுகுமுறை தேவை என்றும் அவர் சொன்னார்.

HUJI:

HARKAT-UL-JEHADI ISLAMI என்ற தீவிரவாத அமைப்பை சேர்ந்த தீவிரவாதியை பாதுகாப்பு படையினர் JAMMU பிரிவின் KISHTWAR மாவட்டத்தில் நேற்று மாலை கைது செய்தனர். அப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் குறித்து கிடைத்த தகவல் அடிப்படையில் இராணுவமும் மாநில காவல் துறையும் நடத்திய கூட்டு நடவடிக்கையில் நான்கு நாட்களுக்கு முன்பு MOHAMMED YOUNIS எனும் தீவிரவாதி கைது செய்யப்பட்டான்.

PDS

நாட்டில் உள்ள ஏழைகளுக்கு உணவு தானியங்களை வினியோகிக்கும் பிரச்சினையில் உச்சநீதிமன்றத்திடம் மோதும் எண்ணம் கிடையாது என்று மத்திய அரசு கூறிவிட்டது. நேற்று நீதிபதிகள் தல்வீர் பண்டாரி மற்றும் தீபக் வர்மா அடங்கிய பிரிவின் முன்னிலையில் பேசிய கூடுதல் அரசுத் தலைமை வழக்குரைஞர் மோகன் பராசரன், இந்தப் பிரச்சினையில் நீதித்துறையுடன் அரசு மோதுகிறது என்கிற மாதிரி சில தவறான செய்திகள் ஒரு சில பத்திரிக்கைகளில் வெளியாகிவிட்டன என்று கூறினார். அவருடைய இந்தப் பிரமாணத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், உணவு தானியங்கள் குறைந்த விலையிலோ, இலவசமாகவோ ஏழைகளுக்கு வினியோகிக்கப்பட வேண்டும் என்ற தங்களது முந்தைய உத்தரவுக்கு அரசு விரிவான பதில் அளித்திருப்பது மகிழ்ச்சி தருவதாகக் குறிப்பிட்டனர். எனினும், உணவுதானியங்கள் மக்கி வீணாவதை விட அவற்றை ஏழைகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது பற்றி அரசின் பிரமாணப்பத்திரத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் கூடுதலாக 25 லட்சம் டன் உணவுதானியங்களை வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட விலையில் விற்பதற்காக மத்திய அரசு விடுவிக்கும் என்று திரு பராசரன் தெரிவித்தார். இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய ஒரு திருப்பமாக, கொள்கை வகுக்கும் பணிகளில் உச்சநீதிமன்றம் தலையிடக் கூடாது என்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மென்மையாகக் கூறிவிட்டார். தமது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வறுமைக்

கோட்டிற்குக் கீழே வாழும் 37 சதவிகித மக்களுக்கு எப்படி உணவுதானியங்களை இலவசமாக வினியோகிக்க முடியுமென்று வினவினார்.

RAJASTHAN
ராஜஸ்தான் மாநிலத்தில் அரசு டாக்டர்களின் வேலை நிறுத்தத்தினால் கடந்த சனிக்கிழமையில் இருந்து புதிதாகப் பிறந்த 7 குழந்தைகள் உட்பட 17 பேர் இறந்துவிட்டனர். டாக்டர்கள் மீது போலீஸ் தடியடி நடத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்படும் இந்த டாக்டர்கள் வேலைநிறுத்தத்தினால் மாநிலத்தில் மருத்துவ சேவைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

KERALA DEATH
கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில், நேற்று கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது. 6 பேர் குட்டிபுரத்திலும், 7 பேர் Vantoorலும், 4 பேர் திரூரிலும் உயிரிழந்தனர். 125 பேர் கோழிக்கோடு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனிடையே, கேரள முதலமைச்சர் திரு அச்சுதானந்தன் இந்தச் சம்பவம் குறித்து நீதிவிசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். மேலும், இறந்தவர்கள் ஒவ்வொருவரின் உறவினர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

WB – STRIKE:
முக்கிய தொழிற் சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ள 24 மணி நேர நாடு தழுவிய பொது வேலை நிறுத்தின் போது சகஜ நிலைமையை நிலைநாட்டும் பொருட்டு மேற்கு வங்க அரசு அனைத்து ஏற்பாடுகளும் செய்துள்ளது. அத்தியாவசிய பொருள்கள் விலை ஏற்றம் மற்றும் உழைக்கும் மக்களுக்கு எதிரான UPA அரசின் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் INTUC, CITU மற்றும் பிற 6 தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்ததிற்கு அழைப்பு விடுத்துள்ளன. விரும்ப தகாத சம்பவங்களை தடுக்க நகரத்தை சுற்றி பாதுகாப்பு பலபடுத்தப்பட்டுள்ளதாக எமது KOLKATA செய்தி தொடர்பாளர் தெரிவிக்கிறார். பதற்றமான பகுதிகளில் கூடுதல் காவல் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

INDIAN ECONOMY
உலகளாவியபொருளாதார மீட்சி சரியான பாதையில் இருக்குமானால், நடப்பு நிதியாண்டில் நமது நாட்டின் வளர்ச்சி 8.75 சதவிகிதமாக இருக்கக்கூடும் என்று நிதி அமைச்சகம் கூறுகிறது. முதல் காலாண்டின் 8.8 சதவிகித வளர்ச்சி ஊக்கமளிப்பதாக இருந்தாலும், இரண்டாவது காலாண்டு சிறிது கடினமானதாக இருக்கக் கூடும் என்று நிதி அமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் திரு கௌஷிக் பாசு கூறினார். எனினும், மூன்றாவது காலாண்டில் 9 சதவிகிதத்திற்கு மேல் வளர்ச்சி ஏற்படக்கூடும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார். நல்ல பருவமழையைத் தொடர்ந்து , விவசாயம் சிறப்பாக இருக்கும் என்பதால் இந்த நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக அவர் சொன்னார்.மின்சாரத் தட்டுப்பாடும், சாலை இணைப்பும் தொழில்வளர்ச்சிக்கு மிகப்பெரிய முட்டுக்கட்டைகளாக உள்ளன என்று கூறிய அவர், தங்க நாற்கரச் சாலைகளும், தொழிற்பேட்டை நெடுஞ்சாலைகளும் போடப்பட்டுவிட்டால் தொழில்வளர்ச்சி அதிகரிக்கும் என்றார் அவர். வைரப்பாதை திட்டங்கள் குறித்துப் பேசிய அவர், மாநகரங்களான சென்னை – கொல்கத்தா போன்ற மாநகரங்களை இணைக்கும் வகையில், மும்பை– தில்லி நெடுஞ்சாலையின் நீட்டிப்பாக

அது இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.இதனால் எல்லா இடங்களிலும் வேலை மற்றும் வளர்ச்சிக்கான தேவைகள் அதிகரிக்கும் என்று அவர் மேலும் சொன்னார்.

PAK BOMBS
பாகிஸ்தானில் நேற்று லாகூர் மற்றும் பெஷாவர் நகரங்களில் ஆற்றல் குறைவான குண்டுகள் வெடித்தன. எனினும், இதனால் ஆள்சேதம் இல்லை. நேற்றிரவு லாகூர் நகரியத்தில் 3 குண்டுகளும், பெஷாவரில் ஒரு குண்டும் வெடித்தன.

ZARDARI-SONIA
காங்கிரஸ் கட்சியின் தலைவராக தொடர்ந்து நான்காவது பதவிக்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி சோனியா காந்திக்கு பாகிஸ்தானி அதிபர் திரு ஆசிப் அலி சர்தாரி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கராச்சி நகரில் இருந்து தொலைபேசி மூலம் திருமதி சோனியா காந்தியுடன் தொடர்பு கொண்டு பாராட்டுத் தெரிவித்தார். பாராட்டுக்கு திருமதி சோனியா காந்தி நன்றி தெரிவித்ததாகவும், வரலாறு காணாத வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானி மக்களுக்கு அனுதாபம் தெரிவித்ததாகவும் இஸ்லாமாபாதில் வெளியிடப்பட்ட அரசுச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

FIXING
பாகிஸ்தானில் கடந்த ஐந்தாண்டுகளாக கிரிக்கெட் அணியில் இடம்பெற்ற மற்றும் தற்போது விளையாடும் வீரர்களின் சொத்துக் கணக்குகளை ஆராய்வது என அந்நாட்டு அரசு முடிவுசெய்துள்ளது. இந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் இதர சொத்து விவரங்களைத் திரட்டும்படி பாகிஸ்தானி வருவாய்த் துறை தனது வட்டார அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக செய்தியேடு ஒன்று தெரிவிக்கிறது.